உ
பதிவு எண் —M 5720. வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

429

# முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

கிளை 6 குருகுலம், மாம்பாக்கம் ; விசய, ஐப்பசி; 23—10—53 தளிர்-1

குருகுலக்கிளை குறிக்கோள் :

பொதுமறை விளக்கம்—திருவள்ளுவர் தெரிவிப்பது

## செய்யாமற் செய்த உதவி

'செய்ந் நன்றி' என்பது 'ஒருவர் தனக்குச் செய்த நன்மை' என்னுங் கருத்துடையது. அதனை அறிதல் என்பது, 'அதனை அறிந்து அன்பு பாராட்டி இணக்கங் கொள்ளுதல்' என்னுங் கருத்தை உணர்த்தும். பிறந்தது முதல் தாய் தந்தை முதலியோரும், அரசன ஆசிரியர் முதலியோரும், நண்பர் சான்றோர் முதலியோரும், எல்லார்க்கும் மேலாகத் தெய்வமும் செய்துவந்த உதவிகள் ஒவ்வொருவர்க்கும் எவ்வளவோ உள்ளன: இவற்றில் காரணம் இல்லாமலும் பயன் கருதாமலும் செய்திருக்கும் உதவிகளும் பலவாகும். இவற்றையெல்லாம் நினைந்து நினைந்து உணர்ந்து உணர்ந்து உள்ளம் நெகிழ்ந்து நெகிழ்ந்து அன்பு ஊறுதலும், தொடர்பு ஏறுதலும், மகிழ்வும் நட்பும் பெருகுதலும், இவ்வாற்றால் வாழ்க்கை அமைதி கொள்ளுதல் முன்னேற்றமுறுதல் நிகழ்தலும், உயிருணர்வின் வளர்ச்சி மேம்படுதலும் ஆகும்; நாடு விளக்கமாவும் நலமாகவும் உயர்வாகவும் திகழும். உதவி செய்தோர் உதவி பெற்றோர் என்னும் இரு பக்கமும் இந் நலங்கள் பரவி நிலைத்து மிளிரும்!

இத்தகைய செய்ந்நன்றியறிதலில், செய்யாமற் செய்த அவ்வுணர்ச்சி நலம் எவ்வளவு மேம்பாடானது! அந்த உணர்ச்சிக்கு முன், வையகம் என்னும் இந்த உலகமும் வானகம் என்னும் அந்த உலகமும் எம்மாத்திரம்! அவ் வுணர்ச்சியின் வழியன்றோ இவ் வுலகங்கள் அனைத்தும் இயங்கி உலகியல் நடைபெற்று வருகின்றது! இவ்வுலகத்தில் பொருள் விளைவுகளும் நல்லாட்சியும் அவ் வுலகத்தில் போக நுகர்வுகளும் இன்ப ஆட்சியும் திகழ்ந்து வருகின்றன! மேலும், இவ்விருமை யுலகுகளுக்கும் மேலான அருளுலகு நலமும் அதனால் ஊற்றெடுத்து வருகின்றது!

செய்யாமற் செய்த உதவிகளை நினைந்து நினைந்து செய்ந்நன்றியுணர்வுகொள்ளாதார்க்கு அருளுலகு நலம் ஏது? நன்றியுணரும் உள்ளப் பக்குவம் உடையவர்க்கன்றோ அருளூற்று நாளும் பெருகி வருகின்றது!

''செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது''

செய்யாமல் செய்த உதவிக்கு-தான் முன் ஓர் உதவியும் செய்யாத நிலைமையில் ஒருவன் தனக்குச் செய்த உதவிக்கு, வையகமும் வானகமும் ஆற்றல் அரிது-இவ் வுலகமே யன்றி வானுலகமும் கைம்மாறாக வழங்குவதாயினும் இணையாதல் அரிது!

இணையாதல் இல்லை என்றபடி; கைம்மாறுகளெல்லாம் காரணம் உடைமையின், காரணம் இல்லாமற் செய்த உதவிக்கு அரிதாயிற்று! ஆற்றல்-ஈடு கொடுத்தல்.

முன் காரணம்இல்லாமையால் வையகமும், பின் பயன் கருதாது செய்தமையால் வானகமும் இணையாதல் இல்லை என்க!

பொருள்களைவிட, உணர்ச்சி நலம் பெரிதாகலின் இணையில்லை என்று கூறினார்.

வையகம் என்றது, வையகத்திலுண்டாகும் விளை பொருள்களையும், வையக ஆட்சியையும்உணர்த்தும்; வானகம்என்றது, வானகத்திலுண்டாகும் போகநுகர்வையும் வானகத்தின் ஆட்சியையும் உணர்த்தும்.

இவ்விருமை நலனுக்கும் மேற்பட்ட அருளுலகப் பெருமை அமைந்தது, செய்யாமற் செய்த உதவியியல் என்பது கருத்து.

## "முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)
6-ம் ஆண்டுக் கையொப்பம்
(23-10-53 முதல்)

| | | | | |
|---|---|---|---|---|
| உள் நாடு | ரூ. | 4 | 0 | 0 |
| வெளி நாடு | ரூ. | 6 | 0 | 0 |
| தனித் தாள் | | 0 | 1 | 0 |
| ஆயுள் — | | | | |
| கையொப்பம் | ரூ. | 100 | 0 | 0 |

விற்பனையாளர்கள், தேவைக்கு முன்பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)


"யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா."
—புறநானூறு.


| கிளை | விசய, ஐப்பசி, | தளிர் |
|---|---|---|
| 6 | 23-10-53 வெள்ளி | 1 |


# இணைப்புகள் வேண்டும்

தமிழ், தமிழர், தமிழ்நாடு தமிழ்ச் சமயம் இவற்றின் முன்னேற்றத்தை விழைபவர்கள். தமிழ் மக்களுக்கு ஆக்கநோக்க மில்லை என்று குறை கூறுவது இயல்பாக இருக்கிறது.

உண்மையில் தமிழ் மக்களுக்கு ஆக்கநோக்கம் இல்லாமல் இல்லை; அந்நோக்கம் தக்கபடி ஒன்று சேர்க்கப்படவில்லை; ஒன்று சேர்க்கும் உள்ளமும், உண்மைப் பணி நாட்டமும் உடைய தலைவர்களில்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

சிறு சிறு கருத்து வேறுபாடுகளுக்காக அல்லது தத்தமக்குத் தனியே ஒரு மதிப்பும் தலைமையும் இருக்கவேண்டும் என்பதற்காகத் தலைவர்களாயிருப்பவர்கள் ஒன்றுபட்டுச் செயலாற்றுமல் தனித் தனியே பிரிந்து நின்று வேலை செய்யத் தொடங்கிவிடுகிறார்கள். நாளடைவில் அடிப்படையில் ஒரே கருத்துடையவர்கள் கூட ஒருவர்க்கொருவர் தாக்கிப் பேசிக் கொண்டும் குறை கூறிக் கொண்டும் கடமையை மறந்து விடுகிறார்கள்.

தமிழ் நாடெங்கும் ஏன் தமிழர்கள் வாழும் இடமெங்கும் தமிழ்க் கழகங்கள் இருக்கின்றன. நூற்றுக் கணக்கிலுள்ள அவைகளின் நோக்கம் மொழி வளர்ச்சியாகவே இருந்தும், அரசியல் சமயம் முதலிய துறையில் இவற்றை நடத்துபவர்கள் வேறுபடுகிற காரணத்தால் மொழித்துறையில் தமக்குள் ஓர் இணைப்பை ஏற்படுத்திக் கொண்டு வேலைசெய்ய முனையாமல் இருக்கின்றனர்.

அவ்வாறே திருவள்ளுவர் பெயரால், நால்வர்கள் அல்லது திருமுறைகள் தொடர்பாய் எத்தனையோ அமைப்புகள் இந் நாட்டில் இருக்கின்றன.

அவ்வப் பிரிவில் உள்ள எல்லா அமைப்புகளும் அடிப்படையில் ஒரே கொள்கையே உடையன. தமக்குள் ஓர் இணைப்பை ஏற்படுத்திக்கொண்டு வேலை செய்ய முன் வரவில்லை.

அதனால், அங்கங்கே உள்ளவர்கள் (பெரும்பாலும் உணர்ச்சி மிக்கவர்கள் எளியவர்கள் அவ்வுணர்ச்சியில் தம் நிலைக்கு [illegible] முயன்று) வெறும் கிளர்ச்சியாகக் கூட்டங்களும் ஆண்டு விழாக்களும், பிறவும் நடத்திச் சில காலத்துக்குப் பிறகு சலித்துப்போய் விடுகின்றனர். தாம் தொடங்கிய அமைப்புகளை விடவும்மனமின்றி, நடத்தவும் இயலாமல் அல்லலுற்று ஆற்றாது அழுங்கிக் கழிகின்றனர்.

கருத்துள்ள தலைவர்கள் அவ்வத்துறை அமைப்புகளையும் இணைத்து ஆக்கப்படுத்தி ஊக்கமூட்டி அங்கங்கே சிதறிப்போகிற உணர்ச்சி, உழைப்பு, செலவுகளை ஒருமுகப்படுத்தி, அரசியல் அமைப்புகளைப் போல ஒரே முறையில் இயக்கி இதழ் முதலியவற்றைத் தொடங்கிக் காலத்துக் கேற்றபடிவிளம்பரமும் கிளர்ச்சியும் கொடுத்து வந்தால் அவ்வப் பிரிவில் உள்ளர்களுக்குள்ளும் ஒற்றுமையும், உருவான பெரும் பணிகளும் கருக்கொண்டு எழும்.

ஆந்திரர்கள் தமக்குள் எத்தனையோ கட்சி வேறுபாடுகள் இருந்தாலும் ஆந்திர மாநில அமைப்பில் ஒற்றுமைப்பட்டு ஒரே குரலை எழுப்பவில்லையா?

எந்தக் கட்சியில் சமயத்தில் துறையில் இருந்தால் என்ன? தமிழர்கள் என்றால் அவர்களுக்குள் ஓர் ஒற்றுமையும் பிணிப்பும் இருக்க வேண்டாமா? தமிழர் அனைவருக்குள்ளும் ஒரு பிணிப்பு ஏற்படாவிட்டாலும், அவர்களுக்குள் அடிப்படைக் கருத்துக்களில் ஒற்றுமை யுடையவர்களாவது, மேற்காட்டிய வகைகளில் தமக்குள் ஓர் இணைப்பு ஏற்படுத்திக் கொள்ள முயலாவிட்டால் என்ன பயன்? உருவான பெரிய வேலைகளை எப்படிச் சாதிக்க முடியும்?

—தமிழ்ச் சிறுவன்.

மொழித் துறை:

# * ஈரடி இருநூறு *

நூலாசிரியர் – திரு. சே. கோதண்டபாணி பிள்ளை அவர்கள் B. A.
(ஆசிரியர் அவர்களின் உரையுடன்)

## அதிகாரம் 7.

## இலக்கியம்

அஃதாவது பாட்டின்கண் அமைந்த உணர்வு நயங் கூறல்; மொழியும் பொருளும் இணைந்தமையுங்கால் ஆண்டு நலம் பயப்பதொரு பெருங் கருவி! அதனை இயற்றுவானது உணர்வு நயமாதலின், அஃதிதன்கண் விளக்கப்பட்டது. எழுத்தாண்மையுடையார் இப் பெரும்பேற்றிற்குரியவராகலின் இஃததன்பின் வைக்கப்பட்டது.

1. இலக்கியம் என்ப
இயலழகு நீதி
இலக்காக இன்பந் தரின்.

இயற்கையுண்மையின் அழகு நிலைகள் நீதி விளக்கங்களைக் கருத்தாகக்கொண்டு கற்பார்க்கு இன்பவெழுச்சி தருமாயின் அவ்வியல்பினவான நூல்களை 'இலக்கியம்' என்று அறிஞர் கூறுவர்.

நூல்களாற் கூறப்படும் உறுதிப் பொருள்களாகிய பொருள் இன்பம் அறம் என்பவற்றை இலக்காகக்கொண்டென்றற்கு முறையே 'இயல் அழகு நீதி' எனவும், கூறுகின்ற எதனையும் மெய்ப்பாடென்னுஞ் சுவையின்பம் பயக்கக் கூறுவது இலக்கியமாகலின் 'இன்பந் தரின்' எனவுங் கூறினர். இலக்கியம் என்பதன் பெயர்க் காரணங் கூறுவார், 'இலக்காக' என்றார். இதனால் இலக்கியம் இன்னதென்பது பெறப்பட்டது.

2. ஆய்ந்துணர ஞாலம்
அலையற்க ஆர்வுற்றுத்
தோய்க இலக்கியத் துள்.

எதனையும் ஆராய்ந்துணர வேண்டின் புறவுலகத்தில் வேட்கையுற்றுத் திரிதலொழிக, மற்று இலக்கிய நூல்களில் திளைத்தல் கொள்க!

பரந்த உலகத்திற் சென்று காண முடியாதனவும் சுருங்கிய நூல்களிலிருந்து காணமுடியுமாகலானும், காண்பதெதனையும் காணும் வகை தோன்ற நூலோர் காட்டுவாதலானும், 'தோய்க இலக்கியத்துள்' என்றார். புறத்தேட்டத்தில் வேட்கை பென்னுங் குற்றமும் அலைவென்னும் இடரும் பெருகி இன்னலுறுதலின், 'அலையற்க ஆர்வுற்' றெனவும், ஒரோ ஒருகால் அத்தேட்டத்திற் செல்ல நேர்வோர்க்கும் இலக்கியத் திளைப்பு அவ்வின்னலைத் தணித்தும் இன்புறுத்தலின் 'தோய்க' எனவும், புறத்திற் கண்ட பொருள்களை மேலும் ஆராய்ந்துணர்வதற்கு இலக்கியங்கருவியாதலின் 'ஆய்ந்துணர' எனவும் விதந்தார் "அச்சமும் அவலமும் ஆர்வமு நீக்கி" (மதுரைக்காஞ்சி, 489) என்புழிப் போல ஆர்வம் ஈண்டு வேட்கையின்மேற்று.

3. காலத்தால் தோற்றும் நூல்
காலத்தின் கைப்படா
சால நலத்த வெனின்.

ஒரு காலத்தின் தேவையினால் தோற்றமுறும் இலக்கியங்கள் மிகவும் நலந்தோன்ற யாக்கப்பட்டனவாயின், அக்காலத்தின அளவுக்குமட்டும் வழங்குதலன்றி எக்காலத்திற்கும் பொதுவாய் வழங்காநிற்கும்.

தோற்றத்திற்குக் காரணங் கூறுவார் 'காலத்தால்' என்றும், காலங் கடந்து நிற்றற்குக் காரணங் கூறுவார் 'சால நலத்தவெனின்' என்றும் விதந்தார். சால நலமாவது உண்மை பொதுமை தூய்மை சுவை முதலியன பெரிதேற்று நிற்றல். 'கைப்படா' வென்றார் அதனோடழியாமை தேற்றுதற்கு.

இவை இரண்டு பாட்டானும் இலக்கியத்தின் மாட்சி கூறப்பட்டது.

4. பிறந்தார் பெருவிளக்காம்
பின்வருவோர் வைப்பாம்
இறந்தார்க் கிலக்கியமே இல்.

இலக்கியங்கள் தோன்றுங் காலத்திற் பிறந்தார்க்கு அவை பெருவிளக்காய் உதவும்; அக்காலத்தின் பின் வருவோர்க்கும் அவை ஒரு பொருள் வைப்பாய் உதவும் இவ்வுலகத்திலிருந்து இறந்துபோனவர்க்கும் நிலை கடந்தவர்க்கும் இலக்கியத்தால் பயனில்லை.

தோற்றுங் காலத்திற்கான் தேவைகளை வழிகாட்டி விளக்குதலானும் அகவிருள் கடியும் போற்றலுடைமையானும் 'பெருவிளக்' கென்றும், இனிப் பின் வருங் காலங்கட்கான் தேவைகளை அங்ஙனம் விளக்காவாயினும் படைத்துப் பயன் கோடற்காம் மூலப்பொருள்களுடைமையானும் நுகர்ந்தின்புறுதற்கேற்ற சுவைத்திறம் அழியாமையானும் 'வைப்பாம்' என்றும் விதந்தார். இறந்தார் நிகழ்ச்சி பிறர்க்கிலக்கியமாவதல்லது அவர்க்கதனாற் பயனின்மையா

னும் நிலைகடந்த மெய்யுணர்வுப் பெரியார் மெய்ப்பாட்டுணர்வு கடந்த சம நிலையாளராகலானும் 'இல்' என்றார். இறந்தார்க்கென் பது இரட்டுற மொழிதல். ஏகா ரம் தேற்றம். ஏனையவற்றிற்கும் நான்கனுருபு விரித்துக்கொள்க!

5. கற்போர்க் குணவாகிக்
கற்றவர்க் கின்பமாய்
நிற்குநூல் நீள்நாள் விருந்து.

கற்போர்க்கு உண்ணுநோத் துணவாய்க் கற்றவர்க்கு உண் டதனாலுளதாகும் இன்பமாகிப் பயன்படா நிற்கும் இலக்கியங் கள் மக்களுக்கு நீண்ட நாள் விருந்தாம்.

உண்ணுநோத்து முயற்சி தோன்ற 'உணவாகி' யென்றும், பின்னர் அம்முயற்சி வருத்த மின்றி அதன் பயனை இன்பமட் டும் அமைதியிற்றோன்றுதலின் 'இன்பமாய்' என்றும், கல்வியு ணவு ஏனைப் பொருளுணவு போல் அழியாததொன்றாகலின் 'நீள் நாள் விருந்' தென்றுங் கூறி னார். பயனிலை வருவித்துக் கொள்க.

6. இன்பெனினும் துன்பெனி
ஏற்றளிசெய் நூலென்ப [னும்
என்றும் அழிவில் துறை.

இன்பத்தை முடிவாகக் கொண்டதாயினும் துன்பத்தை முடிவாகக் கொண்டதாயினும் கருத்தை ஏற்று அன்பைப் பெருக்கும் இலக்கியங்கள் மன்ப தைக்கு என்ஞான்றும் அழித லில்லாத துணையாய் உதவு மென்று அறிந்தோர் கூறுவர்.

வாழ்க்கையுணர்ச்சியின் இத யமே இலக்கியமாய்க் கனிதலின், வாழ்க்கையின் இன்ப முடிவும் துன்ப முடிவும் ஏற்று இலக்கி யங்களும் இருவகையாய் நின் றன. இருவகை முடிவானும் அன்பைப் பெருக்கலாமாகலின் 'அளி செய் நூல்' என்றார். அழி யாமைக்குக் காரணம் முன்னர்க் கூறப்பட்டது. அளி செய்யும் மெய்யுணர்வுடைமையின் 'என் றுந் துணை' யென்றாராயினும் கலைக்குரிய உள்ளம் நிகழு மளவே அது துணையாதல் கொள்க. முன்னர் 'நீள்நாள் விருந்'தென்று ஒரு வரையறை தோன்றக் கூறியதும், இதன் பொருட்டு. மேல் வரும் 'நலிவில்' என்பதும் இது.

7. வாட்ட மறியா வளங்குன்றா
நூலென்ப
நாட்டின் நலிவில் பொருள்.

சுவை நலம் வாடுதலில்லாத கருத்துவளங் குறையாத இலக் கியங்களே ஒரு நாட்டின் அழித லில்லாத சொத்தென்பர் உணர்ந் தோர்.

வாட்டமென்றது ஈண்டு எழி லின் வதக்கமாகலின் இலக்கியங் கள் இங்ஙனம் அழியா எழி லுடையன என்பதற்கு 'அழியா' என்றும், ஆயுந்தொறும் ஊறு தலின் 'குன்றா' என்றுந் தேற் றினார். 'நவில்தொறும் நூல் நயம்' என்றார் பிறரும். இதன் விழுப்பந் தேற்றுதற்கும், விளை யும் பிற பொருள்களினும் மரபு நலத்தானாகிய காரிய மென்றற் கும், உரிமை பேணற்குரிய கருவி என்றற்கும் நாட்டின் மேல் ஏற்றிக் கூறினார்.

இவை நான்கு பாட்டானும் இலக்கியங்களின் பயன் பெறப் பட்டது.

8. அழுத்தமிலாச்
சொல்லமைப்பு
ஆழ்பொருள் இன்மை
இழுக்கென்ப நூலுட் புகின்.

பொருளழுத்தமில்லாத சொல் லமைப்பும் நுட்பமில்லாத கருத் தும் நூலில் நுழைந்து கலந்தால், அந்நூலின் நிலைபேற்றிற்கும் பயனுக்கும் அது தவறாகு மென்று உயர்ந்தோர் கூறுவர்.

தெளிவின் பொருட்டு ஆழ்த லில்லாத பொருள் என உரைக் கப்பட்டது. ஆழம் ஈண்டு நுட் பத்தின் மேலது; 'இன் சொற் பொருள் அழுத்த'மும், 'ஆழ முடைத்தாத'லும் இலக்கிய அழ குக்குச் சிறந்த கருவிகளாகலின், இவ்வாறு கூறினார்.

9. விலைகருதி நூல் தாழச்
செய்வோன் கொலைவிலைக்குக்
கொள்வாருள் வைக்கப் படும்.

விலைப்பொருளை எண்ணி நூலின் திறத்தைக் குறையச் செய்வோன் கொலையின் பொருட்டு ஓருயிரை விலைக்குக் கொள்வோருள் ஒருவனாக வைத்து எண்ணப்படுவான்.

இலக்கியம் கொலையுறுதலின் இவ்வாறு கூறினார். தாழச் செய்தலாவது, உயர்ந்த மொழித் திறம், பொருட்டிறம், சுவைத் திறம் முதலியவற்றை விலை தருவா ருள்ளத்திற் கேற்றபடி குறைத்து அறநெறியும் மாறுதல். கொலைக்குரிய உயிரை நினைந்தார், இலக்கியமும் உயிர்த்திறமுடை யதாய் ஞாலத்தை உணர்ச்சியு டன் இயக்குதலின். இவை இரண்டு பாட்டானும் நூல்கள் இலக்கியமாகாமைக்குரிய கார ணம் கூறப்பட்டது,

10. எழாஅ இலக்கியம்
என்றநாள் நாட்டை
விழாஅ தெடுப்பா ரிலர்.

இலக்கியங்கள் தோன்றா எனப்பட்ட காலம், நாட்டைத் தாழாதபடி மேலுயர்த்து வார் இலர்.

நாடு வீழாத நிலையுடையதா யின் இலக்கியங்கள் தோன்று மாகலின், அவை தோன்றாத நாளில் நாடு கீழ் விழ்தல் திண் ணம் என்றபடி. எனவே, நாட் டின் உயர்வுக்கு இலக்கியங் களின் தோற்றம் தக்க அறிகுறி யாயிற்றென்பது. நூலின்றி

# குன்றக்குடியார் குரல்!

(பண்டு) தமிழர்கள் வாழ்வில் நீதி பொருந்தியிருந்தது. நேர்மை நிலவியிருந்தது. அன்பு மலர்ந்திருந்தது. அறவுணர்வு மண்டியிருந்தது. அவர்கள் மறந்தும் கூடத் தீயன செய்ததில்லை. செய்ய நினைத்ததுமில்லை. அவர்களுடைய வாழ்க்கையில் அகமும் புறமும் ஒத்திருந்தன. சிந்தனையும் செயலும் ஒன்றுபட்டிருந்தன. பிறர் நலம் பேணுகின்ற பெரு மனம் பெற்றிருந்தார்கள். காரணம் கடவுட்பற்று, கடவுள் நம்பிக்கை.

சென்ற சென்ற இடத்திலெல்லாம் சென்று பற்றுகின்ற அறிவைத் தீதினின்றும் விலக்கி நன்மையின்கண் உய்ப்பது சமயம். விலங்கு நீர்மை பொருந்திய பொல்லாத புல்லிய உணர்ச்சிகளினின்றும் விலகிப் பூரண மனிதப் பண்பை நல்கி அருள் உள்ளத்தைக் கொடுப்பது சமயம்! மகவெனப் பல்லுயிரையும் ஒக்கவே பார்க்கும் பண்பைக் கொடுப்பது சமயம்!

சமயச் சார்போடு வளர்கின்ற ஒழுக்கம்தான் நிலைத்து நிற்கும். சமயச் சார்பற்ற-கடவுள் நம்பிக்கையற்றவர்களின் ஒழுக்க நெறி 'ஊற்றில்லா ஓடை போன்றது; வேரில்லா மரம்போன்றது; மணற் பரப்பின்மீது கட்டப்பெற்ற மனைபோன்றது' என்று கூறிவிடலாம். அதாவது வாழ்க்கையின் தேவை நிறைந்திருக்கிற வரையில்—இன்பம் பொருந்தியிருக்கின்ற அளவில் சமயச் சார்பற்றவர்களின் ஒழுக்கம் நிலைபெற்றிருக்கும். ஆனால் தேவை நிறைவுபெறாதபோது, வாழ்க்கையில் துன்பப் புயல் சுழன்றடிக்கின்றபோது, துன்பச் சூழலினின்றும் விடுதலை பெற்றுத் தேவையை நிறைவு செய்துகொண்டு இன்பத்திற் பொருந்தி வாழ்வதற்காகத் தாம் கொண்ட ஒழுக்க நெறியினின்றும் நழுவுவர். அப்படி நழுவ நேரிடுங்காலத்துச் சிலகால வாழ்வுக்கு நீதியையும் நேர்மையையும் பலிகொடுக்காதே; அநீதிக்குத் தண்டனை தரத் தலைவன் ஒருவன் உளன் என்று உணர்த்தி நல்வாழ்வில் நிலைக்கச் செய்வது சமயம்.

பண்புகள் பல்கிப் பக்தி உணர்ச்சி வளரத் துணை செய்பவை ஆலயங்கள். நல்லறிவு கொளுத்தித் தெளிவான உள்ளம் தந்து நல்லுணர்வை நல்கி—கொள்கையைப் பரப்பிக்—காக்கும் காவல் நிலையங்கள் மடாலயங்கள். உணர்ச்சியை உண்டாக்கி வளர்த்துக் காக்க; இது மடாலயங்களின் தொண்டு.

தமிழினத்தின் தனிமைப் பண்பு சமரசநோக்கு. தமிழ் கண்ட உன்னத உயர்மொழி 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்பதாம். இடையில் இந்த நிலை மாறியது. சமய வாழ்வில் சாதி முதலிய புல்லிய உணர்ச்சிகள் தோன்றி வளர்ந்தன. அகவுணர்வைப் போற்றிக் காத்துக்கொள்வதற்காகக் கையாளப் பெற்ற சமயச் சடங்குகளாகவே காட்சியளித்தன. நெஞ்சந் தோய்ந்த சமய வாழ்வு இல்லாமற் போய்விட்டது. புறம் வளர்ந்தது, அகம் தேய்ந்தது. அதனால் தமிழகம் மிகத் தாழ்ந்துவிட்டது.

ஆயிரக் கணக்கான ஆலயங்களிருந்தும், நூற்றுக் கணக்கான மடாலயங்களிருந்தும் இவை தமக்கு மூன்றரைக்கோடிரூபாய் வருமானம் இருந்தும் பிற மதம் புகுகின்ற சகோதரர்களைத் தடுக்கவில்லை. தடுக்க நினைக்கவும் இல்லை. இதனால் இவற்றிற்கு விளைந்த கேடு எண்ணும் தரத்ததா?

பிற மதத்தினர் தம் மதப் பிரசாரத்திற்காக, சைவத் திருநெறியின் கொள்கைகளைச் சிறப்பாக, உருவ வழிபாட்டுக் கொள்கையினை எள்ளி நகைத்துப் பேசி வந்தனர். ஏனென்று கேட்பார் இல்லை. இதனையொட்டி நம்மவரினும் பலர் சமய வாழ்வினையும், வழிபாட்டினையும் இழித்து எள்ளிப் பேசத் தலைப்பட்டனர். இவ்வியக்கம் சாதி ஒழிப்பியக்கமாகத் தோன்றிச் சமய ஒழிப்பியக்கமாக மாறிவிட்டது. மூலை முடுக்குகளில் எல்லாம் நாத்திகம் பரப்பப் பெற்றது.

வீடுகளில், வீதிகளில், மன்றங்களில் ஆலயங்களில் எங்கும் தெய்வத் திருமறைத் தமிழ் முழக்கத்தை எழுப்பவேண்டும்.

ஊர்தோறும் கூட்டு வழிபாட்டு இயக்கங்கள், பொதுப் பிரார்த்தனைகள் முதலியவற்றைத் தோற்றி வளர்க்க வேண்டும்.

---

நாட்டை உயர்த்துதல் கூடாமையின் இலக்கியங்கள் எழாத நாட்டை வேறெவராலும் உயர்த்துதல் இயலாதென்றற்கு "எடுப்பாரிலர்" என்றார். இதனால் நாட்டிற்கு இலக்கியம் இன்றியமையாதென்பது பெற்றாம்.

Telegrams: "RAMBROS"

**N. Ramu Bros;**

GENERAL HARDWARE MERCHANTS

AVANASHI ROAD,

COIMBATORE.

சமய வாழ்வு வாழ்கின்ற பெருமக்களிடத்தும், சமய நிலையங்களிடத்தும் சாதி மனப்பான்மையை வளரவிடக்கூடாது. உண்மைச் சமயத்திற்குச் சாதி உடன்பட்டதன்று புறம்பானது என்று தெளிவாக அறிவிக்க வேண்டும். அப்படி அறிவித்து விடுவது ஒன்றாலேயே பெரும் பகுதியான மக்கள் சமய வாழ்வுக்கு வந்துவிடுவர்.

தமிழன்பில் திளைக்கின்ற பல அன்பர்கள் திருக்கோயில்களில் தமிழுக்கு இடமில்லை என்ற ஒரு காரணத்தால் திருக்கோயில் வழிபாட்டுணர்ச்சிக்கு மாறுபடுகின்றனர். திருக்கோயில்களில் தமிழுக்கு இடம் தருதல் தவறனதாகாது. வேண்டுமானால் பழக்கமெனும் பாசி படிந்த உள்ளங்கள் தவறனதாக நினைக்கலாம். மேற்பரப்பில் காட்சியளிக்கும் பாசியை நீக்கிப் பார்த்தால் அந்தப் பாசி இடையில் படர்ந்தது, வேர் ஊன்றாத பாசி. இயற்கையிலேயே தண்ணீர் தெளிவுதான். அதுபோலவே பண்டுதொட்டே ஆலயங்களில் தமிழ் முழக்கம் கேட்கப் பெற்றதுதான். ஏன், நலிவுற்ற காலத்து நல்லுணர்வு கொளுத்தி சைவம் பரப்பி நானிலத்தைக் காத்த நால்வர் பெருமக்கள் இன்பத் தமிழில்தானே பாடினார்கள். என்னே சமய நிலையங்கள்! தமிழைப் புறக்கணித்துத் தவறனதோர் செயலை விளைவித்துவிட வேண்டாமென்று குறிப்பிட ஆசைப்படுகின்றோம். விரைவில் தமிழ்நாட்டுத் திருக்கோயில்கள் அனைத்திலும் தமிழில் அர்ச்சனை செய்கின்ற பழக்கத்தைக் கையாள முன் வரவேண்டும். இதனால் ஆயிரக் கணக்கான இளைஞர்களின் மனம் மாறும். அவர்கள் தமிழன்போடு சமயப் பற்றிலும் சிறந்து விளங்குவார்கள்.

இனி சமயத்தை வளர்ப்பதற்குரிய வழி, வீடுதோறும் செல்வதுதான். சமயச் சான்றோர்களும், சமயத் தொண்டர்களும் வீடுகள்தோறும் நுழைந்து பரிவாகப் பேசி, வீட்டில் நாள் தவறாது வழிபாடு அல்லது பிரார்த்தனையைக் குடும்பத்து உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றாக இருந்து செய்யும்படி தூண்ட வேண்டும். இங்ஙனம் செய்வதால் வீடுகளில் சமயம் விளக்கம் பெறும். வீடுகள் திருந்தினால் நிச்சயமாக நாடு திருந்தும்.

எத்தனையோ ஆண்டுகளாகத் தமிழினத்தின் ஒரு பகுதியினர் தாழ்த்தப்பட்ட மக்களாக ஒதுக்குப் புறத்தில் வாழ்கின்றனர். அவர்கள் வாழ்க்கையில் நன்மணம் இல்லை. வளமும் இல்லை. இப் பகுதியினரில் பலர் தாம் பிறமதம் புகுந்தவர்கள். எனவே நாம் நமது பழக்கத்தை மாற்றிக் கொண்டு சேரிதோறும் நுழைந்து பரிவோடு அவர்களை அணுகி அவர்களது துன்பம் துடைத்து அவர்களது உணர்ச்சியிலும் வாழ்விலும் சமயத்தைக் கலக்க வேண்டும். இந்தப் பணியால் இரண்டு நன்மைகள் விளைகின்றன. ஒன்று சமயத் தொண்டு. மற்றொன்று சமூகத் தொண்டு. இத்தகு பணியால் தமிழினமே உயர வழியுண்டு. ஒவ்வொரு சேரியிலும் என்று பிரார்த்தனை ஒலி எழுகிறதோ அன்றே சமயத்தின் நன்னாள்!

சமயத் தத்துவங்களை விளக்குகின்ற முறையில் இனிய எளிய தமிழில் அடிக்கடி சிறு நூல்கள் வெளியிடவேண்டும். அ[illegible]கள் மிகவும் குறைந்த விலைக்கு வழங்கப்பட வேண்டும். நூல்கள் விருப்பு வெறுப்பு உணர்ச்சிகளினின்றும் எழுதல் கூடாது. குறிப்பாக உருவ வழிபாட்டு முறைகள், தத்துவங்கள், சமயச் சார்பில் உள்ள புறச் சாதனங்கள், சமய நூல்கள், புராணங்கள் முதலியவற்றைப் பற்றிய உண்மைக் கருத்துக்களை மக்களுக்குத் தெளிவாக எடுத்துக் காட்டவேண்டிய கடமை நமக்குண்டு.

வாழ்க தமிழ்!

வளர்க அருள் நெறி!!

(24-4-53 ல், ஈரோடு சைவர் மாநாட்டுத் தலைமையுரையிலிருந்து திரட்டியவை)

—ந. ரா. ஆட்லரசு.

PHONE 55034 TEL. ENKAYAM
கைத்தறி ஆடைகளில் சிறந்தது எங்கள் கிசான் டிரேட்மார்க்


பட்டாடைகளுக்கும் நூலாடைகளுக்கும் சிறந்த இடம்
கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்
53, கிடங்குதெரு சென்னை 1.

# பணித் துறை

## தமிழ் வளர்ச்சிக் கழகத்தார்க்கு!

தமிழ் மொழி வளர்ச்சியில் அண்மைக் காலத்தில் பெரும் பங்கு கொண்டு மணியாற்றிய அமைப்புகளில் பாண்டித் துரைத் தேவர் நிறுவியுள்ள மதுரைத் தமிழ்ச் சங்கமும், தமிழவேள் உமாமகேசுவரனார் அமைத்துள்ள கரந்தைத் தமிழ்ச்சங்கமும் சிறந்தவை.

இவ்விரண்டு சங்கங்களும் புலவர்களை எல்லாம் தழுவி ஊக்கமூட்டிப் போற்றி அவர்களை மக்கள் அறிந்துகொள்ளும் முறையில் நடைபெற்றன.

இவைகள் எவ்வளவு சிறப்பான முறையில் இயங்கின என்பதை இவற்றின் சார்பில் இப்போதும் நடைபெற்று வரும் "செந்தமிழ்", "தமிழ்ப் பொழில்" என்னும் இதழ்களின் பழைய தொகுதிகளைப் பார்த்தால் தெரியும்.

நிறுவிய பெருமக்களின் காலத்திற்குப் பிறகு இவைகள் அவ்வளவு சிறப்பாக நடைபெறவில்லை; என்றாலும், தமிழ் வரலாற்றில் இவ்விரண்டு சங்கங்களும் பொறிக்கப்படும் அளவுக்குப் பெருந்தொண்டாற்றி இருக்கின்றன.

இவற்றை அடுத்து வாணிப முறையில் நல்ல தமிழ் நூல்களை வெளியிட்டுச் செந்தமிழோடு சிவசமயத்தையும் ஓம்பி வரும் நோக்கத்துடன் இயன்று வரும் ஒரு பெரிய அமைப்பு, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகமாகும்.

இதுவும் சிறந்த தமிழ் அறிஞர்களை எல்லாம் அவர்கள் எந்நிலையராயினும் போற்றி அவர்கள் வழி பல துறையிலும் சிறந்த தமிழ் நூல்களும், பழைய நூல்களுக்கு விளக்கங்களும் கொண்டு வந்து நற்றமிழை வளர்த்து வருகின்றது.

இவை நிற்க, சென்னைத் தமிழ்ச் சங்கம் என்றொரு சங்கம் சில ஆண்டுகட்கு முன் செல்வாக்குடைய சில அறிஞர்களால் நிறுவப் பெற்றது.

செல்வர்கள் சிலரின் ஆதரவையும் அது தொடக்கத்தில் பெற்றதாகவே காணப்பட்டது. ஆனால் அது ஏனோ இதுகாறும் நாட்டியத்தக்க பெரும் பணிகள் எதையும் செய்ததாகத் தெரியவில்லை. இப்போது திரு. வி. க. அவர்கள் பெயரால் ஒரு நல்ல நினைவுச் சின்னம் அமைக்க முயன்று வருகின்றது.

இறுதியாக இங்கே குறிப்பிடத்தக்க வகையில் இப்போது தொண்டாற்றி வரும் ஓர் அமைப்பு, சில ஆண்டுகட்கு முன் சென்னை அரசாங்கத்தில் கல்வி அமைச்சராக இருந்த உயர்திரு. அவிநாசிலிங்கம் அவர்களால் தொடங்கப் பெற்று நன்கு நடைபெற்றுவரும் தமிழ் வளர்ச்சிக் கழகம் ஆகும்.

காலத்தாலும், தொடங்கினோர்களின் சூழல் வசதிகளாலும் இத் தமிழ் வளர்ச்சிக் கழகத்திற்கு நல்ல விளம்பரம் கிடைத்திருக்கிறது.

ஆண்டுக் கொருமுறை இது பெருங்கிளர்ச்சியாக இந்திய நாட்டின் அகத்தும் புறத்தும் நகரங்களில் "தமிழ விழாவை" மிகச் சிறப்பாக நடத்தித் தனக்குள்ள விளம்பரம் முதலிய வசதிகளை நன்கு பயன்படுத்தி உலக மக்களுக்குத் தமிழுணர்ச்சியை ஊட்டி வருகிறது.

அரசியல் தலைவர்களுக்கும், அரசியல் இதழாசிரியர்களுக்கும் மட்டுமே பெரும் செல்வாக்கும் சிறப்பும், விளம்பரமும் தரப்படுகின்ற இக்காலத்தில் இக்கழகத்தைத் தொடங்கியவர்கள் போராவத்தாலும் தமக்குள்ள அரசியல் செல்வாக்காலும் ஒரு சில தமிழறிஞர்களோடு அரசியல் தலைவர்களையும் இதழாசிரியர்களையும் கழகச் செயல்களில் ஈடுபடுத்தித் தமிழுக்கு நல்ல விளம்பரம் கிடைக்குமாறு செய்து வருகிறார்கள். இது உலகத்துக்கே நல்ல விளக்கத்தை நாளடைவில் உண்டாக்கும்.

அதோடு தமிழில் பலதுறைக் கலை நூல்களும் வெளிவர வேண்டும் என்றும், கலைக் களஞ்சியம் ஒன்றும் தமிழில் இருக்க வேண்டும் என்றும், எண்ணி அவற்றின் பரிசுத்திட்டங்களையும், குழுவையும் கூட ஏற்பாடு செய்து, அரசியலாரிடமிருந்தும் செல்வர்களிடமிருந்தும் பொருள் உதவி பெற்

றுத் தமிழ்வளர்ச்சிக் கழகத்தார் செயலாற்றி வருகிறார்கள்.

இவ் வேற்பாடுகளெல்லாம் மிகச்சிறந்த, காலத்துக்கு ஏற்ற நல்லேற்பாடுகளாகவே இருந்தாலும் இவைகளை நன்கு நிறைவேற்றுவதற்கு இக்கழகத்தார் தமிழ்த்துறையில் வல்லவர்கள் யார் யார் என்று இன்னும் கேட்டறிந்தும், தேடிப் பார்த்தும் நிலைகளில் எப்படி இருப்பினும் அவர்களின் தமிழ்ப் புலமை, தமிழார்வம் இவைகளுக்காகவே, அவர்களை மதித்து வரவேற்றும் இணக்கிக்கொள்ள வேண்டியிருக்கிறது.

தமக்குத் தெரிந்தவர்கள், தெரிந்தவர்கள் குறிப்பிடுகிற ஒரு சில தமிழறிஞர்கள், தம் அரசியல் கட்சிக்கு ஒத்தவர்கள் என்று இப்படிப்பட்டவர்களையே தழுவிக் கொண்டு, அவர்களுக்கே வாய்ப்புகளும், விளம்பரங்களும் கொடுத்துக் கொண்டு போகாமல், சிறந்த தமிழறிஞர்கள் என்று தெரிந்தால் அவர்கள் ஒருகால் கருத்து வேறுபாட்டினாலும் பிற காரணங்களாலும் ஒதுங்கி இருந்தாலும், இருக்க முற்பட்டாலும் விளம்பரம் ஆகாதவர்களாக இருந்தாலும் இழுத்துப் பிடித்துப் பயன்படுத்திக்கொள்ள முனைதல் வேண்டும்.

அறிஞர்கள், கலைஞர்கள் என்றால் அவரவர்களுக்கும் ஏதானும் ஒரு தனியான போக்கும் நிலையும் இருக்கும். ஆனாலும், அவற்றிற்காக அவர்களை நெகிழ விடாமல், தமிழின் மேலுள்ள பேரார்வத்தால் நாம்தான் அவர்களை அவரவர்களுக்கு ஏற்றாற்போல் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

பரிசு கொடுக்கிற வகையிலும், நாடறிந்த பெரும் புலவர்களோ, தலைவர்களோ, எழுதுகிற நூல்களுக்குப் பரிசு தராமல் விளம்பரம் இல்லாத நிலையில், ஆனால் உண்மையிலேயே உயரிய நிலையில், ஊக்கப்படுத்தவேண்டிய கட்டத்தில் உள்ளவர்களுக்கு மட்டுமே பரிசளிப்பது என்று வைத்துக்கொள்ள வேண்டும்.

பரிசு பெறுகிறவர்களை விழா இடங்களுக்கு வரவேற்று அவர்கள் பரிசு பெற்ற துறைத் தலைப்புகளில் சொற்பொழிவு ஆற்றச் செய்து அவர்களைப் பொதுமக்களுக்கு அறிமுகப்படுத்தி வைக்க வேண்டும்.

தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் நிகழ்ச்சிகளை அரசியல் கட்சி வேற்றுமை பாராமல் தமிழகத் தலைவர்கள் என்று நாடு ஒப்புக் கொள்ளக்கூடிய பெரு நிலையில் உள்ளவர்கள் யார் யாரோ அவர்களை அணுகிக் கருத்துக்களைக் கேட்டுக் கூடுமானவரை அவைகளையே செயற்படுத்துகின்ற முறையில் அமைத்து நடத்தவேண்டும்.

பட்டம் பெற்றவர்கள், நாட்டுக்குத் தெரிந்தவர்கள் தாம் பெரும் புலவர்கள் என்று எண்ணிவிடாமல், பட்டம் பெறாதவர்கள் அமைதியாக இருக்கின்றவர்களிலும் பெரும் புலவர்கள், அறிஞர்கள் இருப்பார்கள் என்று உணர்ந்து அத்தகையவர்களையும் தேடிப் பிடித்து வெளிக்கொணரவேண்டும்.

ஒரு சிலரின் எதிர்ப்புக்கு இலக்காய் விட்டது என்பதற்காகக் கம்பராமாயணம் போன்ற நூல்களுக்கே விளக்கங்களும், பிறவும் செய்துகொண்டிராமல், அதனோடு சேர்த்து எண்ண வேண்டிய பிற பிற்கால நூல்களுக்கும் சிறந்த சங்க இலக்கியங்களுக்கும் நல்ல விளம்பரமும், விளக்கமும் செய்து வரவேண்டும்.

மேலே குறிப்பிட்ட சங்கங்கள் பொதுமக்களை விடத் தமிழறிஞர்கள் பலரோடு மிகுந்த தொடர்பு கொண்டே நல்ல தமிழ்த் தொண்டு செய்தன.

தமிழ் வளர்ச்சிக் கழகமோ மகிழத் தக்க வகையில் சில சில தமிழறிஞர்கள், இதழாசிரியர்கள், அரசியல் தலைவர்களோடும், மிகுதியாகப் பொதுமக்களோடும் தொடர்பு வைத்துக் கொள்ளுகிற போக்கில் இருக்கிறது.

இரண்டுமே முழுதும் பாராட்டத்தக்க போக்கு என்று கொள்வதற்கில்லை. தமிழறிஞர்களைத் தமிழ்ப் பொது மக்களிடத்திலும் அரசினர்மாட்டும் மிகுதியாகச் சேர்த்து மற்ற அரசியல் தலைவர்கள், கலைஞர்கள், இதழாசிரியர்கள் எல்லோரையுமே அவரவர்கள் வழியில் தமிழ் முகதகில் நிறுத்தித் தமிழ்த் தொண்டாற்றுமாறு செய்வதே தமிழ் வளர்ச்சிக்கு முழுதும் ஒத்த போக்காகும்.

தமிழ் வளர்ச்சிக் கழகத்தைக் குறை கூறும் எண்ணத்தோடு மேலே யுள்ள கருத்துக்களைக் கூறவில்லை.

அதன் ஆர்வத்தையும், போக்கையும் செயல்களையும் கண்டு மகிழ்ந்து மேலும் மேலும் அது தன் தமிழ்த் தொண்டில் சிறக்க வேண்டும் என்னும் நல்லெண்ணத்தோடும், வேறாகக் கருதாமல் ஏற்றுக் கொள்வார்கள் என்னும் நன்னம்பிக்கையோடும், பாராட்டுதலோடும், பணிவோடும் தான் இவைகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

வாழ்க தமிழ்!
வெல்க தமிழ் வளர்ச்சிக் கழகம்!!
விளங்குக தமிழ்ப் பண்பு!!

—தமிழ்ச் சிறுவன்.

பதிப்பித்து அச்சிட்டு வெளியிடுவோர்: தி. சு. பாலசுந்தரம், குருகுல அச்சகம், மாம்பாக்கம்; மதுராந்தகம், (வள்.)